**R 4760 (page 45)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சுவாரசியமான கேள்விகள்

# INTERESTING QUESTIONS

கேள்வி - உரோமர் 5:18-ஆம் வசனத்தில், "ஆகையால் ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று" என்று வாசிக்கின்றோம்; இந்த "இலவசமான ஈவு" எப்பொழுது அனைவருக்கும் செயல்முறைப்படுத்தப்படும்?

பதில் - இந்தச் சுவிசேஷ யுகத்தில் கையாளப்படும் "விசுவாச வீட்டாரை" தவிர்த்து, இந்த இலவசமான ஈவானது அடுத்ததாக மேசியாவின் யுகத்தில் உலகத்திற்கு வரும் என்றும், சபைக்கான கிருபையின் ஈவானது எப்படி அதனோடு சில நிபந்தனைகளை இணைக்கப்பெற்றுள்ளதோ, அதேபோல் உலகத்திற்கான இந்த ஈவோடும்கூடச் சில நிபந்தனைகள் இணைந்து காணப்படும் என்றும் நாங்கள் புரிந்திருக்கின்றோம். நம்முடைய விஷயத்தைப் பொறுத்தமட்டில், பலியின் சிலுவையைச் சுமந்து, நமது தலையைப் பின்பற்றிச் செல்வதே, அந்த நிபந்தனையாக இருக்கின்றது; இந்த நிபந்தனையின்படி நாம் நடவாமலிருந்தால், அந்த ஈவானது நமக்குச் செயல்படுவதில்லை. ஆனால் இந்த யுகம் முடிந்த பிற்பாடு, உலகத்திற்காக மகா பிரதான ஆசாரியன் தேவனுடைய சந்நிதியில் தோன்றி, கிருபாசனத்தின்மீது இரத்தத்தை இரண்டாம் விசை தெளிப்பார்; இயேசு நீதியின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்றுவார்; மேலும் முழு உலகமும் மீட்பரிடத்திற்குக் கைமாற்றப்படுவார்கள்.

கடமையை ஏற்படுத்தி, இந்த மாபெரும் ஈவை அருளுவதே அவரது வழிமுறையாகக் காணப்படுகின்றது. அனைவருக்கும் முழுமையான வாய்ப்பு கிடைக்கும் என்று நமக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது; ஆனாலும் அந்த வாய்ப்பானது, பூமியின் குடிகள் அனைவரையும் ஆசீர்வதிப்பதற்குரிய புதிய உடன்படிக்கைக்குரிய நிபந்தனைகளின் கீழாகவே காணப்படும். அது

**R4760 : page 46**

முதலாவதாக முற்பிதாக்களுக்குச் செயல்முறைப்படுத்தப்படும்; இவர்கள் புதிய உடன்படிக்கையினுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் சிலாக்கியங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்வார்கள். இதற்குப் பிறகு "யூதர்களுக்கு முதலாவது" வரும்; ஏனெனில் யூதர்கள் இத்தகைய ஓர் இராஜ்யத்திற்காக நீண்ட காலமாகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்; மேலும் இத்தகைய ஓர் இராஜ்யத்திற்கான யூதனுடைய காத்திருப்பானது, அவன் அக்காலத்தில் அனுபவிக்கவிருக்கும் சந்தோஷம் மற்றும் ஆசீர்வாதத்தினால் பலனளிக்கப்படும்.

எனினும் இது யூதனோடு மாத்திரம் முடியப்போகிறதில்லை; மாறாக மனுக்குலம் அனைவரும் இந்த ஆசீர்வாதங்களுக்குள் வருவதற்குரிய சிலாக்கியமடைவார்கள்; இப்படியாக இவர்கள் ஆபிரகாமின் சந்ததியார் வாயிலாக ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆபிரகாமின் வித்தானவர்கள் உலகத்தை ஆசீர்வதிப்பார்கள் என்பது உண்மையாக இருப்பினும், ஆவிக்குரிய வித்தானவர்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பார்கள் என்பது மிக குறிப்பாய் உண்மையாக இருப்பினும், வசனம் "உன் சந்ததிக்குள் ஜாதிகள் அல்லது பூமியின் குடிகள் அனைவரும் தங்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக்கிக் கொள்வார்கள்" (In thy seed will all the nations or families of the earth bless themselves) என்றே உள்ளது. அவர்கள் புதிய உடன்படிக்கையினுடைய ஏற்பாடுகளின்கீழ் வருவதன்மூலமே, தங்களை ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக்கிக் கொள்வார்கள்; அதாவது மோசேயினால் மத்தியஸ்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையினால், "இவை அனைத்தையும் நாங்கள் செய்வோம்" என்று யூதர்கள் கூறின உடனே அவர்கள் ஆசீர்வதிக்கப்படவில்லை; அதாவது அந்த உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளின்கீழ் அவர்களாகவே விரும்பி வராததுவரையிலும் ஆசீர்வதிக்கப்படவில்லை; ஆகையால் புதிய உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டு,

அதன் நிபந்தனைகளுக்கு இணங்கும் யார் ஒருவருக்கும், அந்த உடன்படிக்கையானது நித்திய ஜீவனை உறுதியளித்திடும் - மேலும் இதை அவர்கள் அந்த உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிவதன் மூலமாக மாத்திரமே பெற்றுக்கொள்வார்கள்; ஆகையால் முற்பிதாக்களின் விஷயத்தைப்போன்று, மனுக்குலம் பெற்றுக்கொள்ளும் இந்த ஈவானது, உடனடியாகவே அவர்களது ஈவு ஆகிடாது. அது அவர்களுக்கென்றே வைக்கப்பட்டிருக்கும் ஈவாகும்; எனினும் மேசியாவினுடைய ஆயிர வருஷ ஆளுகையின்போது, புதிய உடன்படிக்கையினுடைய நிபந்தனைகளுக்கு இணங்குவதன் மூலமாகக் கர்த்தருடன் இசைவிற்குள்ளாக வருகையில், அந்த ஈவானது அவர்களால் அடையப்படும்.

----------------